# பேரறிஞர் அண்ணா 118வது பிறந்தநாள் - கழகத்தினர் மரியாதை!



விருதுநகர் நகர் தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணாவின் 118 வது பிறந்தநாள் விழா விருதுநகர் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள அண்ணா சிலைக்கு நகர தி.மு.க. செயலாளர் எஸ்.ஆர்.எஸ். தனபாலன் தலைமையில் விருதுநகர் தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், முன்னாள் சேர்மன் சுப்புராஜ், விளையாட்டு மேம்பாட்டு அணி கே.ஜி.ராஜகுரு, பொதுக் குழு உறுப்பினர் ஆர்.பி.மதியழகன், மின்கழகம் அண்ணாதுரை, ஓட்டுநர் அணி எல்.திருமாறன், ஒன்றிய துணைச் செயலாளர் குருசாமி, நகர் மன்றத் தலைவர் எஸ்.ஆர்.எஸ். மாதவன், துணைச் செயலாளர் மரியராசு, புரோஸ்கான், மாவட்ட பிரதிநிதி காஜா பைலின், பொட்டு மாரியப்பன் ஆகியோர் இருந்தனர்.



பேரறிஞர் அண்ணாவின் 118வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் அண்ணா தமிழ்க் கழகம் சார்பில் அண்ணா உருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு. தென்னவன், காரைக்குடி மேயர் நா. குணசேகரன் ஆகியோர் முன்னிலையில் அண்ணா தமிழ்க் கழகத் தலைவர் வே. பொன்துரை அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில் அண்ணா தமிழ்க் கழக செயலாளர் அ. கதிர்வேல், நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




திருப்புவனம் மேற்கு ஒன்றியம். மற்றும் பேரூர் தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 118 வது பிறந்த நாளை முன்னிட்டு மாவட்டக் கழக துணை செயலாளர் பேரூராட்சி மன்ற தலைவர் த.சேங்கை மாறன் தலைமையில் கழகத்தினர்கள் ஊர்வலமாக சென்று சந்தை திடலில் அவருடைய உருவப்படத்திற்கு மாலை அணிவித்து பொது மக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சி கலந்து கொண்டவர்கள் பேரூர் கழக செயலாளர் நாகூர்கனி. மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பொற்கோ. பேரூராட்சி துணைத் தலைவர் ரகமத்துல்லாகான். ஒன்றிய கழக நிர்வாகிகள். ஏனாதி ராமலிங்கம். சங்கங்குளம் ஈஸ்வரன். பூவந்தி மணிகண்டன். அக்கினி ராஜ். மாங்குடி வெங்கடேசன். நகரத் துணைச் செயலாளர் மீனாட்சி சுந்தரம். புலியூர் ரவி. சொட்ட தட்டி சக்தி முருகன். கலிய யாந்தூர் இளங்கோவன். மடப்புரம் மகேந்திரன். பிரமனூர் அறிவுக்கரசு. கொத்தங்குளம் குமரன். கீழடி சங்கர். தொ.மு.ச. பிச்சை. நகர இளைஞரணி அமைப்பாளர் கவுன்சிலர் கண்ணன். தொண்டரணி ராஜா. மீனவரணி அண்ணாமலை. மாணவரணி பாண்டியர் கிருஷ்ணன். இளைஞர் அணி காளிதாஸ். திருப்பதி. கவுன்சிலர்கள் வேல்பாண்டி. பாலகிருஷ்ணன். மாரிதாசன். மற்றும் கிளைக் கழக வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை நகர் 13வது வார்டு முன்னாள் நகர் மன்ற உறுப்பினர் ஜெ.ஜாகீர் உசேன் தலைமையில் பேரறிஞர் அண்ணாவின் 118வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.




சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் வடக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு ஒன்றிய செயலாளர் எம்.ஏ.கடம்பசாமி தலைமையில் நிர்வாகிகள் மலர் தூவி 118 மரியாதை செலுத்தினார்கள்.



கழக சட்டத்திட்ட திருத்தக்குழு தலைவரும், மாநிலங்களவை உறுப்பினருமான சு.கல்யாணசுந்தரம் அலுவலகத்தில் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 118வது பிறந்தநாளை முன்னிட்டு அண்ணா திருவுருவப் படத்திற்கு சு.கல்யாணசுந்தரம் எம்.பி, முன்னாள் அமைச்சர் கோவி.செழியன், முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம், ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.கே.முத்துசெல்வம், சுந்தர.ஜெயபால் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

## மதுராந்தகம் - தாராபுரம் இடைத்தேர்தல் பணிகள்!

### மகளிரணி செயலாளர் ஹெலன் டேவிட்சன் – மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ப.இராணி அறிக்கை!

சென்னை, செப்.17 -

வருகின்ற 06.10.2026 அன்று தேர்தல் நடைபெற உள்ள மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் பணி குறித்து, மாநில மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மகளிர் பிரச்சார குழு, மகளிர் வலைதள குழு நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் கழக துணை பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்பி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இதில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் ஆதரவுடன் போட்டியிடும் கழக வேட்பாளர்களை ஆதரித்து நடைபெறும் பிரச்சாரப் பணிகளில், மகளிரணி நிர்வாகிகள் மாவட்ட கழக நிர்வாகிகளுடன் இணைந்து பணியாற்ற மாநில மகளிரணி நிர்வாகிகளைக் கொண்டு கீழ்க்கண்டவாறு குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

இவர்கள் இவ்விரு தொகுதிகளையும் ஒன்றிய, பேரூர் பகுதிகளாகப் பிரித்து, மகளிர் அணி நிர்வாகிகளைப் பொறுப்பாளர்களாக நியமித்து, தீவிர வாக்கு சேகரிக்கும் பணிகளில் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**1. மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி**

ஹெலன் டேவிட்சன்
அங்கயற்கண்ணி
சேலம் சுஜாதா
ரத்னா லோகேஸ்வரன்
ராணி ரவிச்சந்திரன்
அமலு விஜயன்
டாக்டர் யாழினி
டாக்டர் மாலதி நாராயணசாமி
தேன்மொழி

**2. தாராபுரம் சட்டமன்றத் தொகுதி**

நாமக்கல் ப. இராணி
தமிழரசி ரவிகுமார்
கயல்விழி செல்வராஜ்.
சத்யா பழனிகுமார்
ரேகா பிரியதர்சினி
மாலதி நாகராஜ்
உமா மகேஸ்வரி
விஜிலா சத்யாநந்த்
ஜெசி பொன்ராணி
ரியா.

ஹெலன் டேவிட்சன், மகளிர் அணி செயலாளர். நாமக்கல் ப.இராணி, மகளிர் தொண்டரணி செயலாளர்.



விளாத்திகுளம் மத்திய ஒன்றியம், ஓ.துரைச்சாமிபுரம் கிராமத்தில் ஸ்ரீ புதம்மன் திருக்கோவில் மஹா கும்பாபிஷேக விழாவில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ. வி.மார்க்கண்டேயன் கலந்து கொண்டார். நிகழ்வில் விளாத்திகுளம் மத்திய ஒன்றிய செயலாளர் ராமசுப்பு, விளாத்திகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் இம்மானுவேல், மாவட்ட பிரதிநிதி முனியசாமி கிளைச் செயலாளர்கள் வேலுச்சாமி,ஜெயமுருகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## நீலகிரியில் பேரறிஞர் அண்ணா 118வது பிறந்தநாள் விழா!

நீலகிரி, செப். 17 -

அறிவுலக ஆசான், பேரறிஞர் அண்ணா அவர்களின் 118வது பிறந்தநாளை முன்னிட்டு நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில், மாவட்ட கழக பொறுப்பாளர் - குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம்.ராஜூ ஆலோசனைப்படி, மாவட்ட கழக அலுவலக முகப்பில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாவட்ட கழக அவை தலைவர் போஜன் தலைமையில் நிர்வாகிகள் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

மாவட்ட துணை செயலாளர் ரவிகுமார் வரவேற்றார். மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமை செயற்குழு உறுப்பினர் தம்பி இஸ்மாயில், உதகை நகர செயலாளர்கள் ஜார்ஜ், ரமேஷ், உதகை தெற்கு (மேற்கு) ஒன்றிய செயலாளர் ஜெகதீசன், பொதுக் குழு உறுப்பினர் வாணீஸ்வரி, மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் முஸ்தபா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னதாக நிர்வாகிகள் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவ சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, ஐம்பெரும் முழக்கங்களை முழக்கமிட்டனர். நிகழ்ச்சியில் மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் ராஜா, உதகை நகர அவை தலைவர் ஜெயகோபி, துணை செயலாளர்கள் இச்சுபாய், ரீட்டா மேரி உட்பட ஏராளமானவர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.




ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்குரலாய் வாழ்ந்து மறைந்த தியாகி இம்மானுவேல் சேகரனாரின் நினைவு தினத்தை முன்னிட்டு, விளாத்திகுளம் பாரதியார் பேருந்து நிலையம் முன்பு அமைக்கப்பட்டுள்ள அன்னாரின் திருஉருவப்படத்திற்கு விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ. வி. மார்க்கண்டேயன் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் விளாத்திகுளம் பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி, முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் நடராஜன், வடக்கு மாவட்ட கலை இலக்கிய அணி துணை அமைப்பாளர் ஆவுடையப்பன், வார்டு செயலாளர் மாரிராஜ், புதூர் மத்திய ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் பசும்பொன் பழனிச்சாமி விளாத்திகுளம் பேரூர் கழக இளைஞரணி துணை அமைப்பாளர் முத்துராஜ், இளைஞர் அணி மேசாக் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.